Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 178/2025 PW-1**

Name : கருணாநிதி
Father / Husband name : அய்யால்சாமி
Village : வளத்தி
Age : 62
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 17.11.2025

A1, A2 present. APP present.

<u>முதல் விசாரணை நேரம் 03.51 - 04.35 )</u>

1. நான் தற்போது செஞ்சி மண்டல சர்வோதய நானோ தனியார் நிறுவதனத்தில் 35 வருடமாக ரிஸ்க் மேனேஜராக வேலை செய்கிறேன். சாட்சி துரைஅரசன் என்னுடன் பணிபுரியும் ரிஸ்க் மேனேஜர், சாட்சி மனோகரன் ஆடிட்டர், வழக்கிலுள்ள மற்ற சாட்சிகள் 4 - 159 வரையிலானவர்கள் எங்கள் நிதி நிறுவனத்தில் கடன் பெற்றவர்கள். கடந்த 2018 - 2021 வரை திண்டிவனம், ஒலக்கூர் கிளைகளுக்கு கிளைமேலாளராக உத்திரமேரூரை அடுத்து புளியூரை சேர்ந்த ஏழுமலை என்பவர் பணிபுரிந்துவந்தார். அவருடன் திண்டிவனத்தை சேர்ந்த ராஜேஸ்வரி கணக்காளராக பணிபுரிந்துவந்தார். திண்டிவனம், ஒலக்கூர் கிளைகளுக்கு எனது நிறுவனம் சென்னையிலிருந்து முரளி, வசந்தகுமாரி, மகாலிங்கம் ஆகிய 159 நபர்களுக்கு வாரக்கடன் வழங்கியது.

2. அந்த வாரக்கடனிலிருந்து வாரம் வாரம் வசூல் செய்த தொகைக்கு முறையாக கடன் வாங்கியவர்களுக்கு பில் போட்டு கொடுக்காமலும், வாரம் வாரம் வசூல் செய்த தொகையை கணினியில் அவர்களின் கணக்கில் வரவு வைக்காமலும், வசூல் செய்த தொகை எனது நிறுவனத்தின் வங்கி கணக்கில் செலுத்தாமலும், ஏழுமலையும், ராஜேஸ்வரியும் கூட்டாக சேர்ந்து சதி வேலை செய்து கையாடல் செய்த தொகை ரூ.11,51,633/- ஆகும். இதுசம்மந்தமாக ஏழுமலையும்,

ராஜேஸ்வரியும் எங்கள் நிறுவத்தின் மூத்த ஊழியர், ஆடிட்டர் துறை ரீதியாக பேசியபோது கையாடல் செய்த தொகை ரூ.11,51,633/- ல் நாங்கள் தான் எடுத்தோம் என்று எதிரிகள் ஏழுமலையும், ராஜேஸ்வரியும் ஒப்புக்கொண்டு 02.11.2021 அன்று மாலை 6 மணியளவில் திண்டிவனம் இந்தியன்வங்கி ஏடிம் சென்டரில் ரூ.2,00,000/- ஐ எங்கள் நிறுவனத்தின் வங்கிகணக்கில் செலுத்தினார்கள். மீதமுள்ள தொகை ரூ.9,51,633/- ஐ ஒரு மாதத்தில் கட்டிவிடுகிறேன் என்று கூறினார்.

3. ஆனால் ஒரு மாதம் கழித்து நான் எங்கள் நிறுவனத்தில், திண்டிவனம் அலுகலத்தில் வைத்து கேட்கும்போது எதிரிகள் மரியாதை இல்லாமல் பேசி, திட்டி, 15 அடியாட்களை கொண்டுவந்து நான் கட்டிய ரூ.2,00,000/- ஐ திருப்பி கொடுக்கவில்லையென்றால் உன்னை வெட்டிவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். நான் உடனே 27.12.2021 ம் தேதி திண்டிவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாருக்கு சிஎஸ்ஆர் வழங்கப்பட்டது. எதிரிகள் கேட்ட ரூ.2,00,000/- ஐ நான் கொடுக்காததால் புளியூர் அருகே எங்கள் நிறுவனத்தின் பள்ளி உள்ளது, அந்த பள்ளிக்கு சொந்தமான 4 ஏக்கர் நிலத்தை உழுது நெற்பயிர் நட்டுவிட்டார்கள். அந்த பள்ளிக்கு சொந்தமான ஆரோவாட்டர் பிளாண்ட்டையும் ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள். அதனை அந்த பள்ளி ஆசிரியர்கள் கேட்டபோது மரியாதை இல்லாமல் பேசுவதும், அவர்களை அடிக்கபோவதுமாக இருந்தார்கள்.

4. அந்த நேரத்தில் எனது நிறுவனத்தில் சென்னையிலிருந்து ஏழுமலைக்கு கொடுத்த உத்தரவில் திண்டிவனம், ஒலக்கூர் கிளையிலுள்ள பொருட்கள் அனைத்தையும் என்னிடம் கொடுத்துவிட்டு சென்னைக்கு வருமாறு உத்தரவிட்டிருந்தார்கள். ஆனால் எதிரி என்னிடம் பொருட்களையும் கொடுக்கவில்லை, சென்னைக்கும் செல்லவில்லை. எதிரிகள் கடன் பெற்றவர்களை மிரட்டி மிரட்டி வசூல் செய்தார்கள். எதிரிகள் கையாடல் செய்த தொகையில்

மீதமுள்ள தொகை ரூ.9,51,633/- யும், அதன்பின்னிடடு வசூல் செய்த தொகையும், எதிரிகள் கைப்பற்றிய வாட்டர் பிளாட்டையும் மீட்டு தருமாறு புகார் கொடுத்தேன். 11.05.2022 ம் தேதி விழுப்புரம் குற்றப்பிரிவு அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். 09.06.2022 அன்று புகாரின்பேரில் எங்களை விசாரித்தபிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் விழுப்புரம் மாவட்டக்குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் புகார் ஆவணங்கள் உள்ளது, தற்போது எடுத்துவரவில்லை.

புகார்தாரரிடம் உள்ள அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி முதல் விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**